




தென்னாற்காடு முன்னாள் மாவட்ட கழக செயலாளரும், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினருமான எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் 36வது நினைவு நாளை முன்னிட்டு, அன்னாரது நினைவிடம் மோவூரிலிருந்து அமைதி பேரணி அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. காட்டுமன்னார்கோயில் செட்டித் தெருவில் ஒன்றிய கழக செயலாளர் அ.முத்துசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பேரூராட்சி தலைவர் எஸ்.கணேசமூர்த்தி வரவேற்புரையாற்றினார். ஒன்றிய செயலர் தங்க.ஆனந்தன் மற்றும் கழக முன்னோடிகள் முன்னிலை வகித்தனர். வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், கழக உயர்நிலைசெயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், ஆதிதிராவிடர் நல அணி தலைவர் மருதூர் இராமலிங்கம், முன்னாள் எம்.எல்.ஏ நெல்லிக்குப்பம் புகழேந்தி, செ.சிந்தனைச்செல்வன், எம்.எல்.ஏ, மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், தலைக்கழக பேச்சாளர் ஆடுதுறை உத்திராபதி ஆகியோர் சிறப்புரையாற்றினர். எம்.ஆர்.கே நற்பணி மன்ற செயலாளர் எஸ்.ராஜசேகர் நன்றியுரையாற்றினார். மாவட்ட, ஒன்றிய, மாநகர, பேரூர் கழக நிர்வாகிகள் ,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தென்னாற்காடு மாவட்டக் கழக முன்னாள் செயலாளர்,

# எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி நினைவு நாள் பேரணி-பொதுக்கூட்டம்!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கோவி.செழியன் சிறப்புரையாற்றினர்!

கடலூர், நவ.13-

தென்னாற்காடு முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினரும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் தந்தையாருமான பெருந்தலைவர், முட்டம் எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் 36வது நினைவு நாள் 11.11.2025, செவ்வாய்க் கிழமை அனுசரிக்கப்பட்டது.

வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில், மோவூர் கிராமத்தில் நிறுவப்பட்டுள்ள பெருந்தலைவர் எம்.ஆர்.கிருஷ்ண மூர்த்தி அவர்களின் நினைவிடத்தி லிருந்து, அமைதிப் பேரணியாக புறப்பட்டு காட்டுமன்னார்கோயில் செட்டித் தெருவில் அமைக்கப்பட்டுள்ள பொதுக்கூட்டம் மேடைக்கு வந்தடைந்தது.

இதனையடுத்து நினைவு நாள் பொதுக்கூட்டம் மாலை 6 மணியளவில் நடைபெற்றது.

காட்டுமன்னார்கோயில் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அ.முத்துசாமி தலைமை தாங்கினார். நகர கழக செயலாளர் எஸ். கணேசமூர்த்தி வரவேற்புரையாற்றினார்.

எம்.ஆர்.கே அறக்கட்டளை தாளாளர் எம்.ஆர். தெய்வசிகாமணி, செயற்குழு உறுப்பினர் டி.பூராசாமி,ஒன்றிய கழக செயலாளர் டி.ஜெயபாண்டியன், ஒன்றிய பொருளாளர் எம். ஆர்.சண்முகம், ஒன்றிய கழக செயலாளர் தங்க. ஆனந்தன், மாவட்ட இலக்கிய அணி ஜி.குமாரராஜா, ஒன்றிய அவைத் தலைவர் ஆர்.கருணாநிதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.கார்த்திகேயன், கிழக்கு ஒன்றிய அவைத் தலைவர்கள் ஏ.சின்னப்பா, ஜி.வி.எஸ்.கல்யாணசுந்தரம், ஊராட்சி துணை செயலாளர் நிஜார் அகமது, மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர் பி.மனோரஞ்சிதம்,மாவட்ட பிரதிநிதி எஸ்.உத்திராபதி,மேற்கு ஒன்றிய துணை செயலாளர் பி.பி.பாஸ்கர்,முன்னாள் நகர செயலாளர் டிகேபி. சேகர்,மேற்கு ஒன்றிய துணை செயலாளர் கே.டி. பாலமணிகண்டன்,கிழக்கு ஒன்றிய துணை செயலாளர் டிசிவக்குமார்,மாவட்ட பிரதிநிகள் கேடி.இராஜேந்திரன்,பி.சுந்தில்குமார், ஏவிஆர்.பழனிவேல்ராஜா,டி. கதிர்வேல்,நகர துணை செயலாளர. டி.சுப்பிரமணியன், நகர பொருளாளர் எஸ்.மணிமாறன், நகர அவைத் தலைவர் ஏ.அறிவழகன்,முன்னாள் நகர செயலாளர் ஆர்.பாலு,மாவட்ட பிரதிநிதிகள் பூக்கடை எஸ். செந்தில், எம்.இராமலிங்கம்,ஒன்றிய துணை செயலாளர்கள் உஷா குணசேகரன்,கோமதி சிவதாஸ், முன்னாள் ஒன்றிய துணை பெருந்தலைவர் கே.செல்வகுமார்,நகர துணை செயலாளர் ஏ.சமத்துவம், ஒன்றிய மகளிரணி அமைப்பாளர் ஓய்வு பவானி சிவசுப்பிரமணியன், ஒன்றிய மகளிரணி அமைப்பாளர் எஸ். செல்வராணி, நகர துணை செயலாளர் எஸ்.லதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், உயர்கல்வித் துறை அமைச்சர், கழக மாணவரணி இணை செயலாளர் கோவி.செழியன், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர்,கழக உயர்நிலைசெயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம்,பி. கல்யாணம், முன்னாள் எம். எல்.ஏ.,

நெல்லிக்குப்பம் சு.புகழேந்தி, மாநில ஆதி திராவிடர் நலக்குழு தலைவர் மருதூர் இராமலிங்கம், கழக கடலூர் கிழக்கு மாவட்ட கழக பொருளாளர், எம். ஆர்.கே.பி.ககதிரவன், தலைமை கழகப் பேச்சாளர் ஆடுதுறை உத்திராபதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

ஒன்றிய கழக செயலாளர்கள்:

குறிஞ்சிப்பாடி தெற்கு வி.சிவக்குமார், குறிஞ்சிப்பாடி வடக்கு ஆர்.நாராயணசாமி,

திருமுட்டம் மேற்கு கே.ஆர்.கோவிந்தராஜ், திருமுட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார், கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் மேற்கு பி.சுப்பிரமணியன், கடலூர் வடக்கு கே.ஆர். தனஞ்செயன்,

கடலூர் தெற்கு ஆர்.விஜயசுந்தரம், கடலூர் மத்திய கே.மகேஷ், புவனகிரி கிழக்கு ஏ.எஸ்.மதியழகன், புவனகிரி மேற்கு ஏ.எம்.மதியழகன், புவனகிரி மத்திய வெற்றிவேலு, கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி.சபாநாயகம், கீரப்பாளையம் மேற்குடி.திருமூர்த்தி, கீரப்பாளையம் மத்திய வி. பி.பாலு, கம்மாபுரம் வடக்கு பா.திருமாவளவன்,

கம்மாபுரம் தெற்கு கே. ஆர்.ராயர், கம்மாபுரம் மத்திய பி.சுந்தரபாண்டியன், பரங்கிப்பேட்டை வடக்கு முத்துபெருமாள்,பரங்கிப்பேட்டை தெற்கு ஆர்.கலையரசன், பரங்கிப்பேட்டை மத்திய எம்.மனோகரன்,

குமராட்சி கிழக்கு த.சங்கர்,குமராட்சி மத்திய ஆர். ராஜேந்திரன், குமராட்சி மேற்கு கே.நடராஜன்,

குமராட்சி தெற்கு ம. சோழன், குமராட்சி வடக்கு வி.கோவிந்தசாமி,

கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளையராஜா, வடலூர் நகர கழக செயலாளர் த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: கிள்ளை ரவிச்சந்திரன், வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி. ஆர்.பாலமுருகன், த. ஜேம்ஸ்.விஜய ராகவன், எம்.ஆர்.சண்முகம், இரா. தமிழரசன், ச.கல்யாண சுந்தரம், மு.வெற்றிவேல், என்.டி.கணேசன், மஞ்சு, பா.கோதண்ட பாணி,

பேரூர் செயலாளர்கள்: குறிஞ்சிப்பாடி கு.வே.ப. ஜெய்சங்கர், சேத்தியா தோப்பு ப.மனோகரன், திருமுட்டம் பூ.செல்வகுமார், புவனகிரி த.கந்தன், அண்ணாமலை நகர் க. பழனி, லால்பேட்டை எம். அன்வர்சதாத், கெங்கை கொண்டான் பக்தவத்சலம், பரங்கிப்பேட்டை தேன் மொழி சங்கர்,

வடலூர் நகர்மன்ற துணை தலைவர் சுப்புராயலு, மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: மாணவரணி அமைப்பாளர் அப்பு ஆர்.சத்திய நாராயணன், பொறியாளர் அணி அப்புசந்திரசேகரன், தொண்டரணி ஆராமுது, விவசாய அணி பொன்.பன்னீர்செல்வம், விவசாய தொழிலாளர் அணி ம.இராமசாமி, மகளிர் அணி த.அமுதராணி, மகளிர் தொண்டரணி, ப.மனோரஞ்சிதம், வழக்கறிஞர் அணி பி.அருள்ஜோதி, ஆதிதிராவிடர் நல்லக்குழு ஆர். பரந்தாமன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு எம்.எஸ்.முகமது யூனுஸ், வர்த்தகர் அணி ஆர்.ரெங்கநாதன், தொமுச பி.பழனிவேல், தகவல் தொழில் நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்குமார், மீனவர் அணி வீ.செல்வபாரதி, அயலக அணி வாசு, தொழிலாளர் அணி கி.தண்டபாணி, அமைப்புசாரா

ஓட்டுநர் அணி தாஹூர் சிவக்கொழுந்து, இலக்கிய அணி பழனிசாமி, டி.வெங்கடாஜலபதி, கலை இலக்கிய பிரிவு, ஜி.சின்னமணி, தகவல் தொழில்நுட்ப அணி அ.முத்தமிழ்ச்செல்வன், வி.எம்.வெற்றிச்செல்வன், கோ.பா.கௌதமன், ப.பிரவின்குமார், உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.எம். ஆர்.கே நற்பணி மன்ற செயலாளர் எஸ்.ராஜசேகர் நன்றியுரையாற்றினார்.



சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் வடக்கு பகுதி 72 வது வட்ட கழக துணைச் செயலாளர் செல்வி ராமகிருஷ்ணன் நேற்று முன்தினம் 11–1–1 2025 அன்று இயற்கை எய்தினார். தகவல் அறிந்து மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் மேயர் ஆர்.பிரியா, பகுதிச் செயலாளர் செ. தமிழ்வேந்தன், எம்.சரவணன் எம்.சி., எம்.ஏ.டீக்கா, புவனவதி மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# பிரதமர் மோடி தமிழர்களை இழிவாகப் பேசியது நியாயமா?

**வி.பி. கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்



“பிரதமர் மோடி இந்த நாட்டின் பிரதமராக இருக்கிறோம் என்பதையே மறந்து பீகார் மக்கள் தமிழ்நாட்டில் தி.மு.க. வினரால் துன்புறுத்தப்படுகிறார்கள் என்ற வன்மத்தை விஷமாக கக்கியுள்ளார். இதனை தமிழ்நாட்டின் முதல்வர் கண்டித்து அறிக்கை விட்டவுடன் பிரதமர் மோடி தி.மு.கவினரைத் தான் பேசினார் தமிழர்களைப் பற்றி பேசவில்லை என்று பா.ஜ.க அறிவு ஜீவிகள் சிலர் விளக்கம் அளித்துள்ளனர்.

தமிழர்கள் கட்சி என்றாலே தி.மு.க தான். காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சங்கரலிங்க நாடார் நம்மாநிலத்திற்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்க கோரி எழுபத்தாறு நாட்கள் உண்ணாவிரதம் இருந்து இறந்து போனார். அன்றைய காங்கிரஸ் ஆட்சி அதைக் கண்டு கொள்ளவில்லை. ஆனால் உண்ணா விரதம் இருந்தவரை பார்த்து நிறுத்த வலியுறுத்திய மனித நேயர் அறிஞர் அண்ணா.

அதன் பின் முதல்வராக அமர்ந்தவுடன் அறிஞர் அண்ணா தமிழ்நாடு வாழ்க என்று முழக்கமிட்டு மாநிலத்திற்கு தமிழ் நாடு எனப் பெயர் சூட்டினார். அப்படி பெயர் சூட்டிய தி.மு.க. வினர் தமிழர்கள் இல்லையா? தமிழர்கள் பெரும்பான்மையாக வாக்களித்து தான் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திராவிட மாடல் ஆட்சி நடைபெற்று வருகின்றது. நாங்களா தமிழர்கள் இல்லை?

நயவஞ்சகர்களே நாக்கு இருக்கிறது என்பதற்காக நஞ்சைக் கக்காதீர்கள்.

மோடியின் இந்தப் பேச்சிற்கு தமிழ் தேசியம் பேசிடும் தன்னலக்காரார்கள் ஏன் இதுவரை பதில் தரவில்லை? எடப்பாடி பதில் தரமாட்டார். ஏனென்றால் அவருக்கு திராவிடம் என்றாலே இதுவரை அர்த்தம் தெரியவில்லை. அதோடு தற்போது இந்தி வெறியர்களின் கால்களைத் தழுவிக்கொண்டு வாழ்ந்து வருகிறார். பிழைப்பு நடத்த வேண்டியதும் இருக்கிறது பிள்ளையைக் காப்பாற்ற வேண்டியதும் இருக்கிறது.

இந்தியைத் திணிக்க முயன்ற போது 1965ல் அன்றைய ஆட்சியாளர்களின் துப்பாக்கி ரவைகளை தோளில் தாங்கி தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! என்று உலக வரலாற்றில் ஒரு மொழியை காத்திட நூற்றுக்கணக்கில் உயிரை விட்டவர்கள் தி.மு.க.வினர் என்பதை வரலாறு கற்றவர்கள் நன்றாக அறிவார்கள். தமிழ் காக்க உயிர் நீத்தவர்கள் தமிழர்கள் இல்லையா?

பேரறிஞர் அண்ணா திராவிட நாடு கேட்டார். ஆனால் சீனா இந்தியா யுத்தம் வந்தவுடன் நாட்டிற்காக திராவிட நாடு கோரிக்கையை கைவிட்டார். கார்கில் யுத்தம் நடந்த போது யுத்த நிதியாக அன்றைய பிரதமரிடம் ஐம்பது கோடி ரூபாயை தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். இந்தி பேசும் வேறு எந்த மாநிலமாவது இந்தளவு நாட்டிற்காக நிதி தந்ததுண்டா? இன்று தமிழர்களைப் பற்றிப் பேசுகிற மோடி இதற்குப் பதில் தருவாரா? அவர் குஜராத் முதல்வராக இருந்த போது தானே இந்த யுத்தம் நடந்தது கலைஞரை விட அதிகமாக ஏன் மோடியால் கொடுக்க முடியவில்லை? பணம் இல்லையா? மனம் இல்லையா?

இந்தாண்டு நடந்த ஆபரேஷன் சிந்தூர் போரின் போது இந்தியா வெற்றிக்காக மாபெரும் பேரணி நடத்தியது யார்?

தமிழ்நாட்டின் முதல்வர் தானே! பா.ஜ.க ஆளும் முதல்வர் ஒருவருக்கும் இப்படி பேரணி நடத்த மனம் வராதது ஏன்? தமிழர்களா பிரிவினைவாதிகள்?

விந்திய மலையைத் தாண்டாத சமூக நீதியை இன்றைக்கு இந்தியாவின் வட எல்லை வரை ஏன் பீகாரிலும் பேச வைத்தப் பெருமைக்குரிய இயக்கம் தி.மு.க தானே. அதன் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் தானே! தி.மு.க.வினரா பீகார் மக்களை துன்புறுத்துகிறார்கள்!

முன்பு ஒடிசாவிலே பாண்டியன் என்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி தனது அப்பழுக்கற்ற செயல்பாட்டால் நவீன் பட்நாயக்கின் அன்பைப்பெ ற்றிருந்தார். உடனே மோடி ஒரு தமிழன் ஒடிசாவை ஆளலாமா? என்ற வன்மத்தை விதைத்தாரே?

ஒடிசா பூரி ஜெகந்நாதர் கோயிலின் சாவி திருடப்பட்டு தமிழ் நாட்டில் உள்ளது அப்படி இருக்கலாமா என்று கேட்டது நீங்கள் தானே? இதை இல்லை என்று மறுக்க முடியுமா? கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 175 கூட்டங்களில் பேசிய மோடி 110 கூட்டங்களில் இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சைப் பேசினாரா இல்லையா? இஸ்லாமியர்கள் இந்துப் பெண்களின் தாலியை அறுத்துச் சென்று விடுவார்கள் அவர்கள் ஊடுருவல்காரர்கள் என்று சொன்னாரா இல்லையா?

கல்வி நிதி 2500 கோடியை இந்தியை மூன்றாவது மொழியாக ஏற்றுக் கொண்டால் தான் தருவேன் என்ற தர்மேந்திர பிரதான் கூறிய போது நீங்கள் 10000 கோடி கொடுத்தாலும் இந்தியை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று எங்கள் முதல்வர் கூறியதை கேட்டு தமிழர்கள் “நாகரீகமற்றவர்கள்” என்று ஒன்றிய அமைச்சர் கூறினாரா இல்லையா?

மணிப்பூரில் சிறுபான்மை குக்கி இன கிறிஸ்தவ கோயில்கள் பல இடிக்கப்பட்ட போதும் கிறிஸ்தவர்கள் வீடுகள் தரை மட்டமாக்கப்பட்டபோதும் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட போதும் பல நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டபோதும் லட்சக்கணக்கானோர் அகதிகளாக அண்டை மாநிலங்களுக்கு சென்ற போதும் எப்படியாவது சிறுபான்மை மக்கள் அழிக்கப்பட வேண்டும் என்று 893 நாட்கள் வரை அதை வேடிக்கை பார்த்து ரசித்து மகிழ்ந்தவர் தானே இந்த பிரதமர் மோடி. இவர் எப்போது மணிப்பூர் சென்றார்?

இப்படி உலகில் எந்த நாட்டிலாவது தனது சொந்த நாட்டு மக்கள் கொல்லப்படுவதை எந்தப் பிரதமராவது பார்த்து ரசித்தது உண்டா?

பழமையான மொழி, மூத்த மொழி தமிழ் என்றும், திருக்குறளைப் பற்றி பேசுவதும், ஐநாவில் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற கணியன் பூங்குன்றனார் கூறியதை சொன்னதும் யார்? இதே பிரதமர் மோடி தானே! இவையெல்லாம் தமிழர்களை ஏமாற்றத் தானா?

பிரதமர் மோடி அவர்களே தமிழர்கள் ஏமாளிகள் அல்ல! ஒருபோதும் பா.ஜ.கவை இங்கு ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 8 முறை வந்தீர்களே ஒரே ஒரு சீட்டு உங்களால் வெல்ல முடிந்ததா? 2026 சட்டமன்ற தேர்தலில் நீங்கள் 100 முறை வந்தாலும் உங்கள் மாயாஜாலம் இங்கே வெல்லவே வெல்லாது.

ஒரு காலத்தில் இந்தியாவையே ஆண்டவர்கள் தமிழர்கள் என்று அண்ணல் அம்பேத்கர் கூறியதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம். கடல் வணிகம் மூலம் கிரேக்கத்துடனும், பாரசீகத்துடனும், ரோமோடும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வணிகம் செய்தவர்கள் தமிழர்கள் என்று உலக சரித்திரம் என்று தான் எழுதிய நூலில் ஜவஹர்லால்நேரு குறிப்பிட்டிருக்கிறார். முடிந்தால் படித்துப் பாருங்கள். தமிழர்கள் பெருமை அறிந்து கொள்ளுங்கள். இமயத்தில் புலிகொடி, வில்கொடி, மீன்கொடி என்று இந்தியாவில் பல மன்னர்களை வென்று நட்டவர்கள் மூவேந்தர்கள் என்பதை இதுவரை தெரியாவிட்டாலும் இனிமேல் தெரிந்துக் கொள்ளுங்கள்.

இவையெல்லாம் தெரிந்து விடக்கூடாது என்பதற்காகத் தானே கீழடி ஆய்வு அறிக்கையை ஏற்க மறுக்கிறீர்கள். எங்கே தமிழர் முன்தோன்றிய மூத்த இனம் என்பது தெரிந்து விடுமோ என்ற அச்சமா? உண்மை ஒருநாள் வெளிவந்து தான் தீரும். அமர்நாத்தை ஏன் மாற்றினீர்கள்? இது உங்கள் சின்னப் புத்தியைத் தானே காட்டுகிறது.

சரஸ்வதி நதி என்ற ஒரு இல்லாத நதியை இருந்த நதியாக காட்டிட என்னென்ன வேலை பார்க்கிறீர்கள். அது உண்மையாகப் போக போவதில்லை. சிந்து சமவெளி நாகரீகத்தை சரஸ்வதி நாகரீகமாக ஒரு நாளும் உங்களால் ஆக்க முடியாது. அது திராவிட நாகரீகம் தான். உண்மையில் தமிழர் நாகரீகம் தான்.

பிரதமர் மோடி அவர்களே இந்திய ராணுவத்தில் உங்கள் குஜராத்தை சேர்ந்தவர்கள் சில ஆயிரம் பேராவது இருப்பார்களா? எங்கள் தமிழர்கள் எத்தனை லட்சம் பேர் இருக்கிறார்கள் தெரியுமா? இந்த நாட்டைக் காக்க துப்பாக்கியை தோளில் சுமந்து பனியிலும் மழையிலும் எதிரிகளுக்கு முன்பு துணிச்சலோடு நிற்பவர்கள் தமிழர்கள். நாங்களா பீகாரிகளை தாக்கினோம். இந்த தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட ஒரு கோடி வடமாநிலத்தவர்கள் வசிக்கிறார்கள். இவர்களையெல்லாம் வாக்காளர்கள் ஆக்கி அதன் மூலம் பா.ஜ.க கூட்டணி ஆட்சியை அமைக்க நீங்கள் கொண்டுவந்துள்ளது தான் புதிய வாக்காளர் திருத்த சிறப்பு பணி. பித்தலாட்டம் செய்து எப்படியாவது தமிழ்நாட்டில் ஆட்சி அமைக்கலாம் என்று கனவு காணாதீர்கள். தி.மு.கவினர் எதற்கும் தயாராகத் தான் இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து நன்கு சம்பாதித்து மாதம் எவ்வளவு பணம் பீகாருக்கு செல்கிறது என்பது பிரதமரே உங்களுக்கு தெரியாதா?

தெரிந்தும் ஏன் வெறுப்புப் பேச்சைப் பேசினீர்கள்? பீகார் தேர்தலில் தமிழர்களைப் பற்றிப் பேச வேண்டிய நிலை ஏன் வந்தது? ஒடிசா தமிழர் கையில் இருப்பதாகப் பொய் பேசி உங்களையே நம்பி இருந்த நவீன் பட்நாயக் கழுத்தை அறுத்தீர்கள். இப்போது உங்கள் பார்வை

தமிழர்களை வைத்துப் பீகாரா? 20 ஆண்டுகளாக உங்கள் கூட்டும் அவியலும் தானே அங்கே ஆளுகிறது. உங்கள் சாதனையைச் சொல்லுங்கள்.சதியை அமலாக்க முயற்சிக்காதீர்கள். உங்களை நம்பிவந்த நிதிஷ்குமார் நிலை என்ன ஆகப் போகிறதோ?

தமிழக பா.ஜ.க தலைவர் கும்பகோணத்தில் பல கோயில்கள் இடியும் நிலையில் இருப்பதற்கு தமிழக அரசு தான் காரணம் என பேசியுள்ளார். இதுவரை இந்த திராவிட மாடல் ஆட்சியில் தான் 3791 கோயில்களுக்கு குடமுழுக்கு நடந்துள்ளது. ஆனால் பா.ஜ.க ஆளும் மாநிலத்தில் கும்பமேளாவில் தான் கிட்டதட்ட நூறு பேர் உயிரிழந்துள்ளனர் என்று அமெரிக்கா கூறியிருந்தது. தமிழ்நாட்டில் நடந்துள்ள அளவிற்கு பா.ஜ.க ஆளும் ஏதாவது ஒரு மாநிலத்தில் இத்தனை கோயில்களுக்கு குடமுழுக்கு நடந்துள்ளதா கூற முடியுமா? ராமர் கோயிலை கட்டினோம் என்கிறீர்களே இலங்கையில் 2650-ம் மேற்பட்ட இந்து மத ராமர், சிவன், அம்மன் கோயில்கள் இடிக்கப்பட்டுள்ளது. தினமும் இடிக்கப்பட்டு அங்கு புத்த விகார் வைக்கப்படுகிறது. இதைக் கண்டித்து இலங்கையை உங்களால் தடுக்க முடிகிறதா? தடுக்க மாட்டீர்கள். ஏனென்றால் அந்தக் கோயில்களை வணங்கும் இந்துக்கள் எங்கள் தமிழர்கள். சரி தானே!

தமிழிசை தி.மு.க.-வில் எத்தனை தமிழர்கள் உள்ளனர் என்று பெரிய அறிவாளி போல் கேள்வி கேட்டுள்ளார். இரண்டு கோடி தமிழர்கள் உறுப்பினர்களாகவும் எட்டு கோடி தமிழர்களை பாதுகாக்கும் இயக்கமாகவும் இருப்பது தி.மு.க தான். சங்க இலக்கிய பெயர்களை முதல்வரால் கூற முடியுமா என்று அம்மையார் கேட்டுள்ளார். குமரி அனந்தன் மகளே! சங்க இலக்கியத்தை தற்கால இலக்கியமாக சுவைபட எழுதிய கலைஞரின் மகன் முதல்வரிடமா கேட்கிறீர்கள்? உங்கள் முக்கிய தலைவர் சாவர்க்கர் ஆங்கில அரசிடம் எத்தனை முறை மன்னிப்புக் கடிதம் எழுதி விடுதலை கேட்டார் என்பதை உங்களால் கூற முடியுமா? அல்லது காமராஜர் இறக்கும் போது அவர் தலையணைக்கு அடியில் வைத்திருந்த அவர் கடைசியாக படித்த புத்தகம் எதுவென்று உங்களால் கூற முடியுமா? யாரிடம் சவால் விடுகிறீர்கள்? நாங்கள் கேள்விக் கேட்கத் தொடங்கினால் சந்தி சிரித்துப் போகும் ஜாக்கிரதை.

அ.தி.மு.கவினர் தி.மு.க. ஆட்சிமுடிய அமாவாசைகளை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்கிறார்கள். அப்போது கூட பௌர்ணமியை அவர்களால் கூற முடியவில்லை. இருண்ட ஆட்சியை தந்தவர்களுக்கு அமாவாசை இருள் தானே தெரியும். நாங்கள் விடியலைத் தரும் சூரியனை நம்புகிறவர்கள். நீங்கள் கடைசி வரை அமாவாசையை எண்ணிக் கொண்டே இருக்க வேண்டியது தான்.

பா.ஜ.க தலைவர் நகராட்சி நிர்வாகத்தில் பொறியாளர் நியமனத்தில் 838 கோடி ஊழல் நடந்துள்ளதாக கூறியுள்ளார்.

அத்துறை அமைச்சர் நேரு அவர்கள் தவறே நடக்கவில்லை. வழக்கு போட்டால் சந்திக்கத் தயார் என்று கூறியுள்ளார். ஏதாவது ஒரு ஆதாரத்தை பா.ஜ.க.வினரால் தர முடியுமா? இப்படித் தான் மதுபான துறையில் 1000 கோடி ஊழல் என்று அண்ணாமலை அள்ளி விட்டார். அதையே அமலாக்கத்துறையும் சொன்னது. பிறகு என்ன ஆனது? அண்ணாமலை பதவி பறிபோனது. அதுபோல் தற்போதைய பா.ஜ.க. தலைவர் 838 கோடி நகராட்சித் துறையில் ஊழல் என்று கூறியுள்ளார். சவாலை சந்திக்கத் தயார் என்று அமைச்சர் நேரு கூறியுள்ளார். பாவம் இன்றைய பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் அண்ணாமலையைப் போல் விரைவில் முகாரி ராகம் பாடப் போகிறார். அதற்கு அவரே பொறுப்பாகப் போகிறார்.

தமிழர்களை இழிவாக நாட்டின் பிரதமர் மோடி பேசி உள்ளார். அதற்கு பதில் கூற தெம்பில்லை, திராணியில்லை.

தேவையில்லாமல் எங்களை குறை கூறித் தப்பு தாளங்கள் போட முயலாதீர்கள். நாங்கள் தாளம் போட ஆரம்பித்தால் தாங்க மாட்டீர்கள்.

அது தப்புத் தாளமாக இருக்காது சண்டமாருத தாளமாகத் தான் 2026-ல் இருக்கும்.